பக்கங்கள்:-18

# காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2054 | ஐப்பசி 31 | வெள்ளிக்கிழமை | 17.11.2023 | அதிர்வு 108

## ஜனாதிபதி நேற்று மாலைதீவு பயணம்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று மாலை நாட்டை விட்டு வெளியேறி மாலைதீவுக்குப் பயணமாகியுள்ளார் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

மாலைதீவின் புதிய ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்ட கலாநிதி 05

# 2030 இல் அனைவருக்கும் ஆங்கிலம்



### ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

“மொழி அறிவை தமிழ், சிங்கள மொழிகளுக்கு மாத்திரம் மட்டுப்படுத்த முடியாது. ஏனைய மொழி அறிவையும் மாணத் தலைமுறைக்கு வழங்க வேண்டும் என்பதால் 2030 ஆம் ஆண்டாகும்போது அனைவருக்கும் ஆங்கிலம் என்ற திட்டம் நாட்டின் அனைத்து பாடசாலைகளிலும் நடைமுறைப்படுத்தப்படும்.”

– இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

அதேபோல் பல்கலைக்கழக மாணவர்களுக்கும் 05

# ரணிலை இனிமேல் வீழ்த்தவே முடியாது!

### இராஜாங்க அமைச்சர் அசோக பிரியந்த சூளுரை

“ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை இனிமேல் எவராலும் வீழ்த்த முடியாது. சஜித் பிரேமதாஸ தலைமையிலான எதிர்க்கட்சியினரின் பொய் பித்தலாட்டம் மக்கள் மத்தியில் எடுபடாது.”

- இவ்வாறு பொதுநிர்வாக இராஜாங்க அமைச்சர் அசோக பிரியந்த தெரிவித்தார். 06



# புலமைப் பரிசில் பரீட்சை பெறுபேறுகள் வெளியீடு

### யாழ். மாவட்டத்துக்கு வெட்டுப்புள்ளி 145

(ந.லோகதயாளன்)

2023 ஆம் ஆண்டுக்கான தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை பெறுபேறுகள் நேற்று இரவு வெளியாகியுள்ளன என்று பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

அதன்படி, பரீட்சைகள் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளமான www.doenets.lk இல் பெறுபேறுகளைப் பார்வையிட முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.


நாடளாவிய ரீதியில் இம்முறை ஒக்டோபர் 15 ஆம் திகதி 2 ஆயிரத்து 888 பரீட்சை நிலையங்களில் தரம் 5 புலமைப் பரிசில் நடைபெற்றது.

இதில் மொத்தமாக 3 இலட்சத்து 37 ஆயிரத்து 956 பரீட்சார்த்திகள் தோற்றியிருந்தனர்.

முன்னதாக இந்தப் பரீட்சைப் பெறுபேறுகள் 05

# வவுனியா நகரில் இளம் தாய் மாயம்

### பொலிஸில் முறைப்பாடு



(வவுனியா நிருபர்)

வீட்டிலிருந்து சென்ற தனது மனைவியைக் காணவில்லை எனத் தெரிவித்து 06

# புத்தளம் கடலில் மிதந்த ஆண் ஒருவரின் சடலம்

### அடையாளம் காண உதவுமாறு கோரிக்கை



(ரஸீன் ரஸ்மின்)

புத்தளம் – முள்ளிபுரம் பூவரசன் குடா சிறு கடல் பகுதியில் ,ருந்து ,ரண்டு கிலோ மீற்றர் தொலைவில் மிதந்த நிலையில் ஆண் ஒருவரின் சடலம் நேற்றுக் காலை மீட்கப்பட்டுள்ளது.

குறித்த சிறுகடல் பகுதிக்குத் தொழிலுக்கு சென்ற மீனவர்கள் சிலர், கடலுக்குள் சடலம் ஒன்று கிடப்பதை அவதானித்து 06




நான் இன்று குறிப்பிடப் போகும் விடயம் – தகவல் – குறுகியதுதான். ஆனால் மோசமான விளைவுகள், மாற்றங்கள் ஏற்படுத்தப் போவது பற்றிய தகவல் அது. ‘கடுகு சிறிது என்றாலும் காரம் பெரிதாக இருக்கும்’ என்பது போல என்று வைத்துக் கொள்ளுங்கள்.

2019 – 2022 பொருளாதாரப் பின்னடைவுகளுக்கு ராஜபக்ஷக்களையும் அவர்களது குழாத்தினரையும் 06

# பல்கலைக்கழகங்களை ஸ்தாபிக்கும் அதிகாரத்தை மாகாணங்களுக்கு வழங்குவது மிகப் பாரதூரமானது

## சரத் வீரசேகர எம்.பி. எச்சரிக்கை



“அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்துக்கு அமைய மாகாணங்களுக்கு பல்கலைக்கழகங்களை ஸ்தாபிக்கும் அதிகாரம் வழங்கும் முன்மொழிவு பாரதூரமானது. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அதிகாரத்தை பகிர்ந்தளித்தால் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் மூளைச்சலவை செய்யும் பல்கலைக்கழகங்கள் தோற்றம் பெறும்.”

– இவ்வாறு தேசிய பாதுகாப்புத் தொடர்பான துறைசார் மேற்பார்வை குழுவின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சரத் வீரசேகர தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற 2024ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றுகையில் –

“ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் முன்வைக்கப்பட்டுள்ள 2024 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தின் ஒருசில முன்மொழிவுகள் வரவேற்கத்தக்கவை.

கொழும்பு மாவட்டத்தில் தொடர் மாடி குடியிருப்புகளில் வசிப்பவர்களுக்கு நிவாரணம் வழங்கும் யோசனை வரவேற்கத்தக்கது.

விவசாயிகளுக்கு காணி உரிமை வழங்குவதாக ஜனாதிபதி குறிப்பிட்டிருந்தாலும் அதில் மாறுப்பட்ட பிரச்சினைகள் காணப்படுகின்றன.

பொருளாதார ரீதியில் முன்னேற்றமடைந்துள்ள நாடுகள் காணி உரிமையை முழுமையாக மக்களுக்கு உரித்தாக்குவதில்லை.

ஏனெனில் காணி விவகாரம் நாட்டின் தேசிய பாதுகாப்புத் தொடர்புடையது. ஆகவே காணி உரிமையை முழுமையாக வழங்காமல் நிபந்தனை அடிப்படையில் தற்காலிக உரிமத்தை மாத்திரம் வழங்குவது பொறுத்தமானதாக அமையும்.

அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்துக்கு அமைய மாகாணங்களுக்கு பல்கலைக்கழகங்களை உருவாக்கும் அனுமதி வழங்கப்படுவதாக ஜனாதிபதி குறிப்பிடுவது பாரதூரமானது. 13 ஆவது திருத்தத்தில் கல்வி கட்டமைப்பில் பல்கலைக்கழகங்கள் தொடர்பில் குறிப்பிடப்படவில்லை.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அதிகாரங்களை மாகாணங்களுக்கு பகிர்ந்தளித்தால் கிழக்கு மாகாணத்தில் வாஹப் கொள்கையுடைய ஷரியா பல்கலைக்கழகமும், மூளைச்சலவை செய்யும் பல்கலைக்கழகம் வடக்கு மாகாணத்திலும் ஆரம்பிக்கப்படும்.

அரசியல்வாதிகள் ,மாகாண ஆளுநர்கள் தமக்கு ஏற்றாற் போல் பல்கலைக்கழகங்களை உருவாக்க முயற்சிப்பாளர்கள். ஆகவே மாகாணங்களுக்குப் பல்கலைக்கழக அனுமதி என்ற யோசனை முறையற்றது என்பதை வெளிப்படையாக குறிப்பிடுவோம்.” – என்றார்.

# வரவு – செலவுத் திட்டம் குறித்து எதிர்க்கட்சிகள் போலிப்பிரசாரம்

## ஐக்கிய தேசியக் கட்சி குற்றச்சாட்டு

“ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் முன்வைக்கப்பட்டுள்ள வரவு – செலவுத் திட்டம் நாட்டுக்கு மிகவும் சிறந்ததாகும். சிலர் தமது குறுகிய அரசியல் நோக்கங்களுக்காகவும், தனிப்பட்ட நிகழ்ச்சி நிரலுக்காகவும் அது தொடர்பில் தவறான பிரசாரங்களை முன்னெடுக்கின்றனர். எனவே மக்கள் அவற்றை நம்பி ஏமாந்து விடக் கூடாது.”

– இவ்வாறு ஐக்கிய தேசிய கட்சியின் உப தலைவர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்தார்.

ஐ.தே.க. தலைமையகமான சிறிகொத்தாவில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

“நாட்டில் தற்போதுள்ள நிலைமையில் மிகச்சிறந்தவொரு வரவு – செலவு திட்டம் முன்வைக்கப்பட்டுள்ளது. அஸ்வெசும வேலைத்திட்டத்தின் ஊடாக 18 இலட்சம் குடும்பங்களுக்கு நலன்புரி கொடுப்பனவுகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சமுர்த்தி கொடுப்பனவுகள் வழங்கப்பட்ட போது ஆறாயிரம் கோடி ரூபா மாத்திரமே ஒதுக்கப்பட்டது. ஆனால் இம்முறை 18 ஆயிரத்து 300 கோடி ரூபா இம்முறை ஒதுக்கப்பட்டுள்ளது.

சமூர்த்தி கொடுப்பனவைப் போன்று 1,000 அல்லது 2,000 ரூபா வழங்காமல், மிகக்குறைந்த வருமானம் பெறுவோருக்கு 15,000 ரூபா வரை வழங்கப்படுகிறது.

அடுத்த கட்டத்திலுள்ளோருக்கு 7 ஆயிரத்து 500 ரூபாவும், ஏனையோருக்கு 5 ஆயிரம் ரூபாவும் வழங்கப்படுகிறது. அதே போன்று 13 லட்சம் அரச உத்தியோகத்தர்களுக்கு 10 ஆயிரம் ரூபா சம்பளக் கொடுப்பனவு அதிகரிக்கப்பட்டுள்ளது.

விவசாயிகளுக்கு இலவச உரம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மாணவர்களுக்கான காப்புறுதி வேலைத்திட்டங்களை மீண்டும் நடைமுறைப்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்காக சுமார் 3 பில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது. இவற்றை தவிர இன்னும் என்ன செய்ய வேண்டும்?



காலம் செல்லச் செல்ல பொருட்களின் விலைகளும் குறைவடையும்.

ஒரு சிலர் குறுகிய அரசியல் நோக்கங்களுக்காகவும், தமது தனிப்பட்ட நிகழ்ச்சி நிரலுக்காகவும் இதனை தவறான விமர்சிக்கின்றனர்.

2022 இல் எவ்வாறான நிலைமை காணப்பட்டது என்பதை அவர்கள் நினைவில் கொள்ள வேண்டும். இவ்வாறான போலிப் பிரசாரங்களை நம்பி மக்கள் ஏமாந்து விடக் கூடாது. இவ்வாறான கடுமையான தீர்மானங்களை எடுத்ததனாலேயே இந்தியா இன்று முன்னேற்றமடைந்துள்ளது. நாமும் அவ்வாறானதொரு இலக்கை நோக்கிச் செல்ல வேண்டும்.”

– என்றார்.


வடமாகாண மரநடுகை மாதம்
கார்த்திகை 01 - 30, 2023
"ஒரு தேசமாக நிலைத்திருக்க, ஒரு மாநிலமாக வளர,
மக்களாக வாழ எங்களிடம் மரங்கள் இருக்க வேண்டும்."
தியோடர் ரூஸ்வெல்ற் - அமெரிக்காவின் 26ஆவது ஜனாதிபதி
ஆளுக்கொரு மரம் நடுவோம்
நாளுக்கொரு வரம் பெறுவோம்
கார்த்திகையில் மரநடுகை தேசத்தை மாத்திரமல்ல;
தமிழ்த் தேசியத்தின் ஆன்மாவையும் குளிரச்செய்யும்!
தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம்


AIRPORT PICKUP & DROP
COLOMBO - JAFFNA
WEDDING SERVICE
DAY RENTING
KDH
VAN FOR RENT A/C
Make Your Ride Better
CALL NOW
+94 773 776 882
+94 753 770 230

# நான்கு உணவகங்களுக்கு யாழ் நகரத்தில் சீல் வைப்பு



(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், நவ.17

யாழ்ப்பாணம் மாநகர சபையின் வண்ணார்பண்ணை பகுதி பொது சுகாதாரப் பரிசோதகர் பிரிவான கே.கே.எஸ். வீதி, மற்றும் இராமநாதன் வீதியில் உள்ள உணவகங்கள், வெதுப்பகம் என்பனவற்றில் இடம்பெற்ற திடீர் பரிசோதனையில் சுகாதார சீர்கேடு காணப்பட்ட 4 உணவு கையாளும் நிலையங்களிற்குச் சீல் வைக்கப்பட்டது.

பல தடவைகள் உரிய அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டபோதும் அவற்றைப் பின்பற்றத் தவறிய 03 உணவகங்கள், ஓர் வெதுப்பகம் என்பன தொடர்ந்தும் சுகாதார சீர்கேட்டுடன் இயங்கிய நிலையில் பொது சுகாதார பரிசோதகர் சோதனையில் சிக்கின.

இதனையடுத்து இந்த 03 உணவகங்கள் மற்றும் வெதுப்பகம் என்பவற்றிற்கு எதிராக மேலதிக நீதிவான் நீதிமன்றில் தனித்தனியே பொது சுகாதார பரிசோதகர் தி.கிருபனால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

வழக்குகளை விசாரித்த மேலதிக நீதிவான் சுகாதார சீர்கேடுகள் திருத்தம் செய்யும் வரை 04 உணவு கையாளும் நிலையங்களையும் சீல் வைத்து மூடுமாறு பொது சுகாதாரப் பரிசோதகரிற்குக் கட்டளையிட்டார். அத்துடன் வழக்குகளை மேலதிக விசாரணைகளுக்காக டிசம்பர் மாதத்திற்கு ஒத்திவைத்தார்.

இதனைத்தொடர்ந்து 04 உணவு கையாளும் நிலையங்களும் பொது சுகாதார பரிசோதகர் தி.கிருபனால் சீல் வைத்து மூடப்பட்டன.

### குற்றவாளிகள் தொடர்பில் சரியாக வழக்குத் தொடுக்காத

# ஏறாவூர், சந்திவெளி, கரடியனாறு பொலிஸாருக்கு எதிராக பொலிஸ் மா அதிபர் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்!

### ஏறாவூர் சுற்றுலா நீதவான் கட்டளை பிறப்பிப்பு

(கனகராசா சரவணன்)

ஏறாவூர், சந்திவெளி, கரடியனாறு பொலிஸ் பிரிவுகளில் திருட்டுச் சம்பங்கள் தொடர்பாக கைது செய்யும் சந்தேக நபர்களுக்கு எதிராக குற்றவியல் சட்டக் கோவையின் கீழ் பொலிஸார் சரியாக வழக்குத் தொடராத காரணத்தால் குற்றவாளிகள் சட்டத்தில் இருந்து தப்பிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. எனவே பொலிஸாருக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸ் மா அதிபருக்கு ஏறாவூர் சுற்றுலா நீதிமன்ற நீதிவானும் மேலதிக நீதிவானுமாகிய அன்வர் சதாக் நேற்று முன்தினம் புதன்கிழமை கட்டளை பிறப்பித்துள்ளார்.

இந்த நீதிமன்றில் ஏறாவூர், சந்திவெளி, கரடியனாறு பொலிஸ் நிலையங்களினால் திருட்டுசம்பங்கள் தொடர்பாக கைது செய்யப்பட்ட 3 பேருடைய வழக்கு விசாரணை நேற்று முன்தினம் ஏறாவூர் சுற்றுலா நீதிமன்றத்தில் மேலதிக நீதிவான் முன்னிலையில் விசாரணைக்காக எடுக்கப்பட்டது.

இதன் போது அந்த வழக்கில் சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்யப்பட்ட 3 பேருக்கும் எதிராக சரியான முறையில் பொலிஸார் வழக்குத் தொடராத காரணத்தால் அவர்கள் குற்றவாளிகள் என நிரூபிக்கப்படாமல் அவர்களை வழக்கில் இருந்து நீதிவான் விடுதலை செய்தார்.

இந்த நபர்களுக்கு எதிராக வழக்குத் தொடர்ந்த பொலிஸ் நிலையங்களின் பொலிஸார் அந்த நபர்கள் பல திருட்டுச் சம்பவங்களில் தொடர்புடையவர்கள் எனத் தெரிந்திருந்தும் அவர்களுக்கு எதிராக குற்றவியல் சட்டத்தின் கீழ் சரியான பிரிவுகளில் வழக்குத் தொடரவில்லை எனக் கூறப்படுகின்றது.

இதன் காரணமாக பல குற்றவாளிகள் தண்டிக்கப்படாமல் வெளியில் சென்று, மீண்டும் குற்றங்களில் ஈடுபடுகின்றனர். இதற்குக் காரணம் பொலிஸாரே.

எனவே பொலிஸ் மா அதிபர் அந்தப் பொலிஸ் நிலையங்களின் குற்றத்தடுப்பு மற்றும் சிறு குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸார், பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி உள்ளிட்டோருக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும் என கட்டளை ஒன்றை நீதிவான் பிறப்பித்துள்ளார்.

# யாழில் மீனவர் அமைப்புக்களின் பிரதிநிதிகளுடன் நேற்று சந்திப்பு






(ந.லோகதயாளன்)

தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணத்தில் நேற்று மீனவர் அமைப்புக்களின் பிரதிநிதிகளுடன் சந்திப்பு இடம்பெற்றது.

இலண்டனில் உள்ள மீன்பிடிச் சுற்றுச் சூழலியலாளர்கள் இருவர் மற்றும் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் மீன்பிடித் துறையைச் சேர்ந்த ஒருவர் பங்குகொண்டு உள்ளூர் மீனவர் அமைப்புக்களின் பிரதிநிதிகளுக்குக் கடல் சுற்றுச் சூழல் தொடர்பில் கருத்துக்களைத் தெரிவித்தனர்.

இதன்போது கடலிலே கைவிடப்படும் வலைகளால் ஏற்படும் பாதிப்புக்கள், வலை தவிர்ந்த ஏனைய பொருள்களைக் கடலில் கைவிடுவதன் ஏற்படும் பாதிப்புக்கள் தொடர்பில் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன.

சேதமடையும் வலை உள்ளிட்ட ஏனைய பொருட்களை மீள் சுழற்சிக்கு உட்படுத்துவது தொடர்பிலும் இதன் போது ஆராயப்பட்டது.

## 2030இல் அனைவருக்கும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி.)

ஆங்கில அறிவைப் பெற்றுக்கொடுப்பதற்கு அவசியமான வேலைத்திட்டம் தயாரிக்கப்படும் எனவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று நடைபெற்ற, டீ.எஸ் சேனநாயக்க கல்லூரியின் ஸ்தாபகரும் தலைசிறந்த கல்வியலாளருமான மறைந்த ஆர்.ஐ.டி அலஸின் 10 ஆவது நினைவு தின நிகழ்வில் உரையாற்றும்போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது ஆர்.ஐ.டி அலஸின் 10 ஆவது நினைவு தினத்தை முன்னிட்டு "மாகே மங்பெத" என்ற சுயசரிதை நூலும் வெளியிடப்பட்டது.

அதிபர்கள் ஆயிரம் பேருக்கு மேற்படி நூலை வழங்குவதற்கான ஆரம்பகட்டமாக 10 பேருக்கு நூல்கள் வழங்கப்பட்டன.

இந்நாட்டின் கல்வித் திட்டத்தை மறுசீரமைப்புக்கும் வேலைத்திட்டம் தொடர்பில் தெளிவுபடுத்திய ஜனாதிபதி, "அனைவருக்கும் கல்வி" என்பதே ஆர்.ஐ.டி அலஸின் நோக்கமாக இருந்தது என்றும் தெரிவித்தார்.

பணம் இல்லை என்ற காரணத்தால் எந்தவொரு பிள்ளைக்கும் உயர் கல்வி வாய்ப்பு கிடைக்காமல் போய்விடக்கூடாதென சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, சொத்துக்களை விற்று பிள்ளைகளை வெளிநாடுகளுக்கு அனுப்பும் யுகத்துக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்றும் தெரிவித்தார்.

இந்நாட்டு பிள்ளைகளின் உயர் கல்வி உரிமையை உறுதிப்படுத்தும் வகையில் அரச மற்றும் தனியார் துறைகளில் புதிய பல்கலைக்கழங்களை ஆரம்பிக்கவிருப்பதாகவும், அதற்கு பங்களிப்பு வழங்கும் தனியார் துறையினருக்கு குறைவின்றி ஆதரவு வழங்க எதிர்பார்ப்பதாகவும் உறுதியளித்தார்.

நாட்டின் மீது அக்கறை இருக்குமாயின் இந்நாட்டு மாணவர்களின் எதிர்காலத்திற்காகப் புதிய பல்கலைக்கழகங்களை ஆரம்பிக்க புலம்பெயர் தமிழ், சிங்கள இலங்கையருக்கு ஜனாதிபதி அழைப்பு விடுத்தார்.

இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க,

"பிள்ளைகளுக்கு சிறந்த கல்வியை பெற்றுக்கொடுப்பதே அனைத்து பெற்றோரின் எதிர்பார்ப்பாகும். கல்வியை தமிழ், சிங்கள மொழிகளுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தாமல் ஜப்பான், சீனா, அரபு, கொரிய மொழிகளையும் பிள்ளைகளுக்கு வழங்க வேண்டும்.

2030 ஆம் ஆண்டளவில் அனைவருக்கும் ஆங்கிலம் என்ற திட்டம் நாட்டின் அனைத்து பாடசாலைகளிலும் நடைமுறைப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளதோடு, அதேபோல் பல்கலைக்கழக மாணவர்களுக்கும் ஆங்கில அறிவைப் பெற்றுக்கொடுப்பதற்கு அவசியமான வேலைத்திட்டமும் தயாரிக்கப்படும்.

இந்நாட்டின் உயர்கல்வி தொடர்பில் சிறப்பு கவனம் செலுத்துகின்றோம். இந்நாட்டின் இலவசக் கல்வி இருப்பதாக கூறினாலும் பெருமளவானோர் உயர்கல்விக்காக வெளிநாடுகளுக்குச் செல்கின்றனர். உலகின் பல்வேறு நாடுகளில் இந்நாட்டு பிள்ளைகள் உயர் கல்வி பயில்கிறார்கள். அந்த நாடுகளில் காணப்படும் கல்வி முறைமைகளை நமது நாட்டிலும் செயற்படுத்துவோம்.



பல்கலைக்கழங்களுக்கு செலுத்த அவசியமான பணத்தை பல்கலைக்கழகங்களுக்கு வழங்குவதே இலவச உயர் கல்வியாகும் எனப் பலரும் கூறுகிறார்கள். இருப்பினும் மற்றைய நாடுகளில் அந்த முறையில் உயர்கல்வி வழங்கப்படுவதில்லை.

கல்விச் செயற்பாடுகளை தொடர மாணவர்களுக்கு சலுகை கடன் வழங்கப்படுகின்றது.அதனால்விரும்பியபல்கலைக்கழகத்தைத் தெரிவு செய்யும் வாய்ப்பு மாணவருக்கு கிடைக்கின்றது. எமது நாட்டில் அந்தத் தெரிவை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவே செய்கிறது. அதனால் மாணவர்களுக்கு வாய்ப்பளிக்க வேண்டும். அதேபோல் பணம் இல்லாதன் காரணத்தால் எந்தவொரு மாணவருக்கும் உயர்கல்வி வாய்ப்பு கிடைக்காமல் போகக்கூடாது.



இந்நாட்டில் பல்கலைக்கழகங்களின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும். தற்போதுள்ள பல்கலைக்கழகங்களின் தரத்தையும் மேம்படுத்த வேண்டும். பல்கலைக்கழகங்களுக்கு அவசியமான வசதிகளை வழங்கி அதன் பலன்களை 5 வருடங்களில் அடைய வேண்டும். அதன் போது மாணவர்களுக்கு சிறந்த கல்வி கிடைக்கும். அதேபோல் ஜோன் கொத்தலாவல பல்கலைக்கழகத்திற்கு இணையான 3 தொழில்நுட்ப பல்கலைக்கழகங்களைஆரம்பிக்கவும்எதிர்பார்க்கின்றோம்.

அதேபோல் அரச சார்பற்ற நிறுவனங்களை ஆரம்பிக்கவும் நாம் அனுமதி வழங்குவோம். தனியார் பல்கலைக்கழகங்களில் கல்வி பயில மாணவர்களுக்கு சலுகைக் கடன்கள் வழங்கப்படும். எனவே, காணிகளை விற்பனை செய்துவிட்டு வெளிநாடுகளுக்கு செல்ல வேண்டிய அவசியம் இருக்காது. நாட்டின் பல்கலைக்கழகங்கள் அதிகரிக்கும் பட்சத்தில் வெளிநாட்டு மாணவர்களின் வருகையும் அதிகரிக்கும்." – என்றார்.

இந்த நிகழ்வில் மகா சங்கத்தினர் தலைமையிலான மதத் தலைவர்கள், பிரதமர் தினேஷ் குணவர்த்தன, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, அமைச்சர்களான டிரான் அலஸ், சுசில் பிரேமஜயந்த, தேசிய பாதுகாப்பு தொடர்பிலான ஜனாதிபதியின் ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, பிரதமரின் செயலாளர் அனுர திஸாநாயக்க, கேட்வே சர்வதேச பாடசாலை குழுமத்தின் தலைவர் வைத்தியர் ஹர்ஷ அலஸ் மற்றும் குடும்ப உறுப்பினர்கள், வலயக் கல்விப் பணிப்பாளர்கள், அதிபர்கள், பாடசாலை மாணவர்கள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

## ஜனாதிபதி நேற்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மொஹமட் முய்சுவின் பதவியேற்பு விழாவில் கலந்துகொள்வதற்காகவே ஜனாதிபதி ரணில் அங்கு சென்றுள்ளார்.

மாலைதீவு குடியரசு சதுக்கத்தில் இன்று குடியரசுத் தலைவர் பதவியேற்பு விழா நடைபெறவுள்ளது.

## புலமைப் பரிசில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அடுத்த வாரம் வெளியாகும் என்று பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்திருந்த நிலையில், நேற்று இரவு வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மாவட்ட ரீதியிலான வெட்டுப்புள்ளிகளில் வடக்கு, கிழக்கு மாவட்டங்களின் விபரம் வருமாறு:–

யாழ்ப்பாணம் 145, கிளிநொச்சி 144, முல்லைத்தீவு 145, வவுனியா 145, மன்னார் 143, திருகோணமலை 144, மட்டக்களப்பு 145, அம்பாறை 145.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
குற்றவாளிகளாக்கி உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு, ரணிலின் அரசுக்கு முண்டு கொடுத்து நிற்கும் மொட்டுக் கட்சிக் குள்ளே வெளியே தெரியாத பூகம்பக் குழப்பத்தை - அதிர்வை - ஏற்படுத்தி இருக்கின்றது.

'செல்லும் செல்லாதது எல்லாம் செட்டியார் தலை மீது' என்பது போல எல்லாப் பழியும் மொட்டுத் தரப்பால் ரணில் மீது சுமத்தப்படுகின்றது.

தங்களுடன் சேர்ந்திருந்தபடி, தங்களுக்கு நரி தந்திரம் காட்டுகின்றார் ரணில் என்று ராஜபக்ஷக்கள் தரப்பில் பலரும் பொருமுகின்றனர். என்ன நிலைப்பாடு எடுப்பது என்பது தெரியாமல் மஹிந்தர் தடுமாறுகின்றார்.

உயர்நீதிமன்றத் தீர்ப்புக்குப் பின்னர் தமது அமெரிக்க பச்சை அட்டை குடியுரிமை வசதியைத் துறந்து, தேர்தல் களத்துக்கு வர பஸிலும் தயாரில்லை என்று கூறப்படுகின்றது.

தப்பித் தவறி இன்னொரு ஆட்சிக் காலம் ரணிலுக்கு விட்டுக் கொடுத்தால், இறுதியில் இன்றைய ஐ.தே.கட்சியின் நிலைதான் தங்களின் மொட்டுவுக்கும் நேரும் என்று மொட்டின் இளம் தரப்பு - நாமல் ராஜபக்ஷ உட்பட்ட பிரிவினர் - கருதுகின்றனர்.

இந்த வரவு - செலவுத் திட்டத்திலேயே ரணிலின் காலை வாரி, புதிய அரசியல் கலாச்சாரம் ஒன்றுக்கு தயாராக வேண்டிய வேளை வந்து விட்டது என்பது நாமல் தரப்பின் கருத்தாகத் தெரிகின்றது.

நாட்டில் ஏதேனும் அதிரடி அரசியல் மாற்றங்கள், திருப்பங்கள் நேர வேண்டும் என்றால் அதற்கு இந்த வரவு - செலவு திட்டத்தில்தான் அதிக வாய்ப்பு இருப்பதாக கொழும்பு அரசியல் அவதானிகள், ஊடகவியலாளர்கள் கூறுகின்றனர்.

தெற்கில் சில சிங்கள ஜோசியர்களும் அப்படித்தான் கணிப்பிட்டு இருக்கின்றார்களாம்...!

என்ன, அப்படி நடந்தால் எங்களுக்குத்தான் செய்தித் தீனிக்குப் பஞ்சம் இருக்காது. பார்ப்போம் என்ன நடக்கும் என்பதை.

அடுத்து வரும் நாள்களில் இது பற்றிய மேலதிக தகவல்களைத் தரக்கூடியதாக இருக்கும் என்று நம்புகிறேன்.

## புத்தளம் கடலில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி....)
அது பற்றி அந்தப் பகுதியிலுள்ள கிராம சேவகருக்கு தெரியப்படுத்தினர்.



இதையடுத்து சம்பவம் தொடர்பில் புத்தளம் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதை அடுத்து சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் முதற்கட்ட விசாரணைகளை முன்னெடுத்தனர்.

நீல நிற சேர்ட்டும், நீல நிற பாதணிகளும் அணிந்திருந்த நிலையில் காணப்பட்ட ஆணின் சடலம் யாருடையது என்பது பற்றிய தகவல்கள் இதுவரை தெரியவில்லை என்று பொலிஸார் குறிப்பிட்டனர்.

சம்பவ இடத்துக்கு விஜயம் செய்த புத்தளம் பகுதிக்குப் பொறுப்பான திடீர் மரண விசாரணை அதிகாரி பதுர்தீன் முஹம்மது ஹிஸாம் சடலத்தைப் பார்வையிட்டதுடன், இந்தச் சடலம் யாருடையது எனவும், இவரது உறவினர்கள் தொடர்பிலும் கண்டறியுமாறும், அதன் பின்னர் பிரேத பரிசோதனைக்கு உட்படுத்துமாறும் பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

இனந்தெரியாத அந்தச் சடலம் தற்போது புத்தளம் தள வைத்தியசாலையின் பிரேத அறையில் குளிர்சாதனப் பெட்டியில் வைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் புத்தளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

மேற்படி சடலமாக மீட்கப்பட்டவர் தொடர்பில் தகவல் எதுவும் தெரிந்தால் அது பற்றி புத்தளம் பகுதிக்குப் பொறுப்பான திடீர் மரண விசாரணை அதிகாரியின் 0774144432 எனும் இலக்கத்துக்கோ அல்லது புத்தளம் பொலிஸ் நிலையத்தின் 0322265223 எனும் இலக்கத்துக்கோ அறியத் தருமாறு பொலிஸார் கேட்டுக்கொள்கின்றனர்.

## ரணிலை இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)
"உற்பத்திகளை அதிகரித்தல் மற்றும் பொருட்களின் விலைகளைக் குறைப்பதன் ஊடாக நாட்டு மக்களுக்கு சுமுகமான சூழலொன்றை உருவாக்குவதே ஜனாதிபதியின் நோக்கமாகும்" என்றும் அவர் குறிப்பிட்டார்.

சம்பள அதிகரிப்பால் மாத்திரம் அதற்குத் தீர்வு காண முடியாது என்றும், அடுத்த வருடத்தின் முதற் காலாண்டில் சுமுகமான நிலைமை உருவாகும் என எதிர்பார்க்கப்படுகின்றது என்றும் அவர் கூறினார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த இராஜாங்க அமைச்சர்,

"மக்கள் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் புதிய வருமான வழிமுறைகளை உருவாக்க கூடியதுமான வரவு - செலவுத் திட்டம் ஒன்றும் முன்மொழியப்பட்டுள்ளது. அது தொடர்பிலான பல்வேறு விமர்சனங்களும் எழுந்துள்ளன.

குறிப்பாக பிரதமரின் கீழுள்ள பொது நிர்வாக, உள்நாட்டு அலுவல்கள், உள்ளூராட்சி சபைகள் மற்றும் மாகாண சபைகள் அமைச்சின் வேண்டுகோளுக்கு இணங்க அரசாங்க ஊழியர்களுக்கான 10 ஆயிரம் ரூபா சம்பள அதிகரிப்பு வழங்கப்பட்டுள்ளது.

இருப்பினும் சம்பள அதிகரிப்பால் மாத்திரம் பிரச்சினைகளைத் தீர்த்துவிட முடியாது. கொவிட் பரவல் காலத்திலிருந்து அரச ஊழியர்களுக்கு சிறிதளவும் சம்பள அதிகரிப்பு கிடைக்கவில்லை என்பதாலேயே தற்போது சம்பள அதிகரிப்பு செய்யப்பட்டுள்ளது.

அத்தோடு கல்வித் திட்டத்தை விஸ்தரிக்கும் நோக்கில் 4 புதிய பல்கலைக் கழகங்கள் ஆரம்பிக்கப்படவுள்ளதோடு, தடைப்பட்டு கிடக்கும் வீதி நிர்மாண பணிகளுக்கும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறான விடயங்களை மறைத்து விட்டு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ உள்ளிட்ட தரப்பினரால் கிரிக்கெட் தொடர்பிலான விடயங்கள் குறித்த கலந்துரையாடல்கள் ஏற்படுத்தப்படுகின்றமை கவலைக்குரியது. இருப்பினும் அரச தரப்பினர் அந்தத் தவறுகளைச் செய்யவில்லை.

அதேபோல், அரசின் வரி வருமானம் பெப்ரவரி மாதத்திலேயே சேகரிக்கப்படும் என்பதாலேயே பெப்ரவரி மற்றும் மார்ச் மாதங்களின் அரச வருமானத்தை கொண்டு ஏப்ரல் மாதத்திலிருந்து அரச ஊழியர்களுக்கு சம்பள அதிகரிப்பை வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அரச ஊழியர்களின் சம்பள அதிகரிப்புக்கு மேலதிகமாக நாட்டின் ஏனைய மக்களுக்கும் நிவாரணம் கிடைக்க வேண்டும். அதற்காக அனைவரும் ஒன்றுபட்டுச் செயற்பட வேண்டியது அவசியமாகும். குறிப்பாக அரசு வழங்கும் சலுகைகளை வியாபாரச் சமூகம் மக்களிடத்தில் கொண்டு சேர்க்க வேண்டும்.

அத்தோடு இம்முறை முன்மொழியப்பட்டு வரவு - செலவுத் திட்டத்தின் ஊடாக அடுத்த வருடத்தின் பெப்ரவரி, மார்ச் மாதமளவில் பொருட்களின் விலையைக் குறைக்க வேண்டும் என்பதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் எதிர்பார்ப்பாகும்.

மேலும் எதிர்க்கட்சியில் இருப்போர் அளவற்ற சலுகைகளை மக்களுக்கு வழங்க முடியும் என்று கனவு காண முடியும். ஆனால், அரசை வழிநடத்திச் செல்வது கனவு காண்பதைப் போன்று இலகுவான விடயமல்ல." - என்றார்.

## வவுனியா நகரில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி.)
அவரது கணவர் வவுனியா பொலிஸ் நிலையத்தில் நேற்று முறைப்பாடு பதிவு செய்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

இந்த மாதம் 8 ஆம் திகதி வீட்டிலிருந்த தனது மனைவி மதியம் ஒரு மணியளவில் வெளியில் சென்றார் எனவும், அதன் பின்னர் வீடு திரும்பவில்லை எனவும் கணவனின் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பண்டாரிக்குளம் பகுதியைச் சேர்ந்த எஸ்.கேதீஸ்வரி (வயது 31) என்ற இரண்டு பிள்ளைகளின் தாயே இவ்வாறு காணாமல்போயுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

காணாமல்போன பெண் தொடர்பான தகவல் தெரிந்தவர்கள் 0770780766 என்ற தொலைபேசி இலக்கத்துக்கு அழைப்பை ஏற்படுத்தித் தெரியப்படுத்துமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## பந்துல குணவர்த்தனவின் கண்டுபிடிப்பு

போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் பந்துல குணவர்த்தன புதிய 'கண்டுபிடிப்பு' ஒன்றைக் கண்டறிந்து அறிவித்திருக்கின்றார்.

"நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலையில் இருந்து மீள்வதற்கு அரசியல் தீர்வுகள் பயனற்றவை. பொருளாதாரத் தீர்வுகளே அவசியம். அவை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சமர்ப்பித்துள்ள இந்தப் புதிய வரவு - செலவுத் திட்டத்திற்குள் அடங்கி இருக்கின்றன." - இதுதான் அவரது கண்டுபிடிப்பு.

பந்துல குணவர்த்தன ஒரு பொருளாதார ஆசிரியர். அவரிடமிருந்து இதற்கு மேல் புத்திசாலித்தனமான - அரசியல் மேதாவித்தனமான - கருத்தியல் ஒன்றை எதிர்பார்த்தால் அது நமது தப்புதான்.

2019 முதல் 2022 வரை ராஜபக்ஷ அணியினர் முன்னெடுத்த தவறான பொருளாதார நடவடிக்கைகளினாலேயே நாடு வங்குரோத்து நிலைக்கு வந்தது என்று உயர்நீதிமன்றம் இப்போது கூறினாலும், அது ஒரு குறுகிய காலப் பார்வையே.

இந்த 2019 முதல் 2022 வரையான காலப்பகுதியில் ராஜபக்ஷவினரும் அவரது குழுவினரும் தவறான பொருளாதாரத் தீர்மானங்களை முன்னெடுத்து, நாட்டைக் குட்டிச்சுவராக்கிய போது, அந்த நடவடிக்கைகள் அனைத்தையும் நியாயப்படுத்தி, பொதுவெளியில் தத்துவம் பிளந்தவர்தான் இந்தப் பொருளாதார ஆசிரியர் பந்துல குணவர்த்தன.

போட்ட அமைச்சர் பதவிப் பிச்சைக்காக சேர்ந்திருக்கும் அணியை நியாயப்படுத்துவது அவரது செஞ்சோற்றுக் கடன். முன்னர் ராஜபக்ஷக்களுக்குச் செய்தார். இப்போது ரணிலுக்குச் செய்கின்றார். அவ்வளவுதான் வேறுபாடு.

ஆனால் இந்தப் பொருளாதார ஆசிரியருக்கு, நாட்டின் பொருளாதாரம் இத்தகைய மோசமான நிலைமையை எட்டியமைக்கு தீர்க்கப்படாமல் இழுபட்ட தேசிய இனப் பிரச்சினையும், அதனால் வெடித்த கொடும் இனப்போரும்தான் பிரதான காரணம் என்ற அடிப்படை கூட தெரியாமல் போய்விட்டது. இல்லை தெரிந்தும் ஜனாதிபதி ரணிலைப் புகழ வேண்டும் என்று செஞ்சோற்றுக் கடனுக்காக இப்படி பேசுகின்றாரா அல்லது பேரினவாதத் திமிர் இப்படிப் பேச வைக்கின்றாதா என்பது தெரியவில்லை.

ஆனாலும் தமிழர் தரப்பின் விடுதலைப் போராட்டஅமைப்பானதமிழீழவிடுதலைப் புலிகளும், அதன் தலைவர் பிரபாகரனும் இல்லை என்ற தைரியம் இப்படி யதார்த்தத்திற்கு அப்பால் போய் நின்று அவரைத் துணிச்சலுடன் பேச வைக்கின்றது என்பது தெளிவானது.

இவ்வளவு பட்டுத்தெளிந்த பின்னரும் சிங்கள தலைமைகளும் தலைவர்களும் நாட்டின் தேசிய இனப் பிரச்சினைக்கு அமைதித் தீர்வு ஒன்றை - சமாதான உடன்பாடு ஒன்றை - ஒருமித்த இணக்கக் கருத்து ஒன்றை - எட்டாமல் நிரந்தர அமைதியும், நீடித்த சமாதானமும் சாத்தியமில்லை என்ற யதார்த்தம் புரியாமல் இருக்கின்றமை ஆச்சரியத்துக்குரியது.

சர்வதேச நாடுகள் பலவற்றின் உதவியுடன் பல நரித் தந்திரத் திட்டங்களைப் பயன்படுத்தி, தமிழீழவிடுதலைப்புலிகளைஅழித்ததோடு, இந்த நாட்டில் இனப்பிரச்சினை என்ற ஒன்றே இல்லாமல் போய்விட்டது என்பதுதான் ராஜபக்ஷக்களின் - மிகக் குறிப்பாக கோட்டாபய மற்றும் மஹிந்த போன்றோரின் - பேரினவாத மேலாதிக்க சிந்தனையின் கருத்தியலாக இருந்தது.

அந்தத்தவறானஎடைபோடலின்விளைவுதான் இத்தகைய மோசமான பொருளாதார நெருக்கடி ஏற்பட்டமைக்கும் - குறிப்பாக அந்த நெருக்கடியில் இருந்து மீள்வதற்கான வாய்ப்புகள் அடைபட்டு திக்குத் தெரியாத நிலையில் இலங்கை அந்தரித்தமைக்கும் - முக்கிய காரணமாகும்.

பட்டும் தெளியாத சிங்களப் பேரினவாதம் திருந்தவே போவதில்லை என்பதை பந்துல குணவர்த்தனவின் இந்தப் புதிய கண்டுபிடிப்பு உறுதிப்படுத்துகின்றது.

## வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை - 2023

"இந்த உலகத்தில் அழகானது எதுவுமே இல்லை என்று ஒருபோதும் சொல்லாதீர்கள். எப்போதும் உங்களை ஆச்சரியப்படுத்தும் அளவுக்கு ஒரு மரத்தின் தோற்றத்தில், ஒரு இலையின் அசைவில் ஏதோவொன்று இருக்கும்"

- அல்பேட் சுவைற்சர் (பிரான்ஸ் தத்துவவியலாளர் - சமாதானத்துக்கான நோபல் பரிசு பெற்றவர்)



# இந்தியா - இலங்கை இடையேயான கூட்டு இராணுவப் பயிற்சி ஆரம்பம்



இந்தியா – இலங்கை இடையேயான 9 ஆவது கூட்டு இராணுவப் பயிற்சி புனேவில் நேற்று ஆரம்பமானது.

இது தொடர்பாக இந்திய மத்திய அரசு வெளியிட்ட செய்தி குறிப்பில், இந்தியா – இலங்கை இடையேயான 9 ஆவது கூட்டு இராணுவப் பயிற்சி 'மித்ரா சக்தி -2023' புனேயில் தொடங்கியது.

இந்தப் பயிற்சி எதிர்வரும் 29 ஆம் திகதி வரை நடத்தப்படுகிறது. 120 வீரர்களைக் கொண்ட இந்தியப் படைப்பிரிவில் முக்கியமாக மராத்தா தரைப்படை பிரிவைச் சேர்ந்த வீரர்கள் பங்கேற்கின்றனர். இலங்கை தரப்பில் 53 தரைப்படை பிரிவைச் சேர்ந்த வீரர்கள் பங்கேற்கின்றனர். இந்திய விமானப்படையைச் சேர்ந்த 15 வீரர்களும், இலங்கை விமானப்படையைச் சேர்ந்த 5 வீரர்களும் இந்தப் பயிற்சியில் பங்கேற்கின்றனர்.

பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளின்போது கூட்டு எதிர்வினைகளை ஒருங்கிணைப்பது இந்தப் பயிற்சியின் நோக்கமாகும். தாக்குதல், தேடுதல் மற்றும் அழித்தல் போன்ற உத்தி சார்ந்த நடவடிக்கைகளை இரு தரப்பினரும் மேற்கொள்வார்கள். கூடுதலாக, இராணுவ தற்காப்பு கலைகள், துப்பாக்கிச் சுடுதல் பயிற்சி மேற்கொள்ளப்படுகிறது. அத்துடன் யோகா உடற்பயிற்சி பாடத்திட்டத்தின் ஒரு பகுதியாக இருக்கும்.

மித்ரா சக்தி – 2023 பயிற்சியில் ஹெலிகொப்டர்கள் தவிர ட்ரோன்கள் மற்றும் ஆளில்லா வான்வழி அமைப்புகள் பயன்படுத்தப்படும். ஹெலிபேட்களை பாதுகாப்பது மற்றும் பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளின் போது காயமடைந்தவர்களை வெளியேற்றுவது தொடர்பான ஒத்திகைகளும் இரு தரப்பினராலும் கூட்டாக ஒத்திகை செய்யப்படும்.

பங்கேற்பாளர்கள் ஒருவருக்கொருவர் பரஸ்பரம் கற்றுக்கொள்ள உதவும் பரந்த அளவிலான போர்த் திறன்கள் குறித்த கூட்டுப் பயிற்சிகளின் கருத்துக்களையும் நடைமுறைகளையும் இரு தரப்பினரும் பரிமாறிக் கொள்வார்கள். சிறந்த நடைமுறைகளைப் பகிர்வது இந்திய ராணுவத்திற்கும், இலங்கை இராணுவத்திற்கும் இடையிலான பாதுகாப்பு ஒத்துழைப்பின் நடவடிக்கையை மேலும் மேம்படுத்தும்.

இந்தப் பயிற்சி இரு அண்டை நாடுகளுக்கும் இடையே வலுவான இருதரப்பு உறவுகளை வளர்க்கும் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

'மித்ரா சக்தி – 2023' பயிற்சியில் ஹெலிகொப்டர்கள் தவிர ட்ரோன்கள் மற்றும் ஆளில்லா வான்வழி அமைப்புகள் பயன்படுத்தப்படும். ஹெலிபேட்களை பாதுகாப்பது மற்றும் பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளின் போது காயமடைந்தவர்களை வெளியேற்றுவது தொடர்பான ஒத்திகைகளும் இரு தரப்பினராலும் கூட்டாக ஒத்திகை செய்யப்படும்.

பங்கேற்பாளர்கள் ஒருவருக்கொருவர் பரஸ்பரம் கற்றுக்கொள்ள உதவும் பரந்த அளவிலான போர்த் திறன்கள் குறித்த கூட்டுப் பயிற்சிகளின் கருத்துக்களையும் நடைமுறைகளையும் இரு தரப்பினரும் பரிமாறிக் கொள்வார்கள். சிறந்த நடைமுறைகளைப் பகிர்வது இந்திய இராணுவத்திற்கும், இலங்கை இராணுவத்திற்கும் இடையிலான பாதுகாப்பு ஒத்துழைப்பின் நடவடிக்கையை மேலும் மேம்படுத்தும். இந்தப் பயிற்சி இரு அண்டை நாடுகளுக்கும் இடையே வலுவான இருதரப்பு உறவுகளை வளர்க்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# உத்தரப் பிரதேசத்தில் கடுகதி ரயிலில் தீ விபத்து!

## – 19 பேர் காயம்



உத்தரப் பிரதேசம் மாநிலத்தின் எட்டாவா அருகே டெல்லி – சஹர்சா வைசாலி கடுகதி ரயிலின் பெட்டி ஒன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் சிக்கி 19 பேர் காயமடைந்துள்ளனர்.

தீ விபத்துக்குள்ளான ரயில் டில்லியில் இருந்து பிஹாரின் சஹர்சாவுக்கு சென்று கொண்டிருந்தது. அந்த ரயில் நேற்று அதிகாலை உத்தரப் பிரதேசத்தின் எட்டாவாவை நெருங்கிக் கொண்டிருந்த போது, ரயிலின் எஸ்.6 பெட்டியில் இருந்து புகை வந்ததைப் பார்த்த பயணிகள் சிலர் ரயிலில் இருந்து ஊழியர்களுக்கு தகவல் அளித்தனர். அதனைத் தொடர்ந்து ரயில் மெயின்பூரி சந்திப்புக்கு முன்பாக நிறுத்தப்பட்டது.

ரயில்வே பொலிஸார் மற்றும் ரயில்வே பாதுகாப்பு படை பொலிஸாரின் ஒரு மணிநேர தீவிர முயற்சிக்கு பின்னர் தீ அணைக்கப்பட்டது. தீ விபத்தில் பாதிக்கப்பட்ட பெட்டி தனியாக பிரித்தெடுக்கப்பட்ட பின்பு கடுகதி ரயில் மீண்டும் அதன் பயணத்தைத் தொடங்கியது.

உள்ளூர் அதிகாரிகளின் தகவலின்படி, இந்தத் தீ விபத்தில் 19 பேர் காயமடைந்துள்ளனர். இதில் 11 பேர் மேலதிக சிகிச்சைக்காக சாய்ஃபை மருத்துவப் பல்கலைகழகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். விபத்துக்கான காரணம் இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை.

இதுகுறித்து அந்தப் பகுதி பொலிஸ் அதிகாரி கூறுகையில்,

இந்த விபத்தில் உயிரிழப்புகள் எதுவும் இதுவரை பதிவாகவில்லை. காயமடைந்தவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.தீவிர விசாரணைக்கு பின்னர் இத்தீவிபத்துக்கான காரணம் குறித்து தெரிய வரும் என்று தெரிவித்துள்ளது.

# இஸ்ரேலின் இனப்படுகொலைக்கு எதிராக ஐ.நா. உறுப்பு நாடுகள் விழிப்படைய வேண்டும்

## - பாலஸ்தீன தூதுவர் கருத்து



ஹமாஸ் – இஸ்ரேல் போர் நாளுக்கு நாள் நீடித்துவருகிறது. இந்த நிலையில், இஸ்ரேலின் இனப்படுகொலைக்கு எதிராக நாடுகள் விழித்துக்கொள்ள வேண்டும் என்று பாலஸ்தீன தூதர் இப்ராஹிம் கிரைஷி தெரிவித்துள்ளார்.

ஹமாஸ்– இஸ்ரேல் குறித்து பாலஸ்தீன தூதர் இப்ராஹிம் க்ரைஷி ஜெனீவாவில் நடைபெற்ற ஐ.நா. உறுப்பு நாடுகளின் கூட்டத்தில் பேசினார்.

இதன்போது அவர் தெரிவிக்கையில், “இஸ்ரேலின் இனப்படுகொலைக்கு எதிராக ஐ.நா. உறுப்பு நாடுகள் விழித்துக் கொள்ள வேண்டும். நீங்கள் இந்த அறையிலேயே எழுந்திருக்க வேண்டும். இது ஒரு படுகொலை, இது இனப்படுகொலை. நாங்கள் இதை தொலைக்காட்சியில் பார்த்து கொண்டுதான் இருக்கிறோம். இது மாதிரியான செயல்களை தொடர முடியாது” – என்றார்.

இதேவேளை, காசாவில் பாதுகாப்பான பகுதிகளே இல்லை என ஐ.நா. தெரிவித்துள்ளது. இஸ்மாயில் ஹனியே என்பவர் ஒட்டுமொத்த ஹமாஸ் அமைப்பின் தலைவராக கருதப்படுகிறார். காசாவில் உள்ள அவரின் இல்லத்தை ஜெட் விமானங்கள் தாக்கியதாக இஸ்ரேல் கூறுகிறது. ஹனியே தற்போது கட்டாரில் வசிக்கின்றார் என தெரிவிக்கப்படுகிறது. இந்த வீடு ஹமாஸ் கூட்டம் நடைபெறும் இடமாக பயன்படுத்தப்பட்டு வருவதாக இஸ்ரேல் கூறுகிறது.

ஒக்டோபர் 7 ஆம் திகதி தொடங்கிய இஸ்ரேல் – ஹமாஸ் இடையிலான போர் நாளுக்கு நாள் தீவிரமாக நடைபெற்று வருகிறது. இதில் ஆயிரக்கணக்கான மக்கள் தொடர்ந்து கொல்லப்பட்டு வருகின்றனர். பெரும்பாலான உலக நாடுகள் காசாவில் போர் நிறுத்தத்தை அறிவிக்குமாறும் இஸ்ரேலை அறிவுறுத்தி வருகின்றனர். ஹமாஸ் அமைப்பினரை வேரோடு அழிக்கும் வரை தாக்குதலை நிறுத்த மாட்டோம் என்று இஸ்ரேல் சபதம் செய்துள்ளது.

இதனால், காசாவில் உள்ள மக்களுக்கு முதலுதவி மற்றும் மனிதாபிமான உதவிகள் கிடைப்பதில் தொடர்ந்து சிக்கல் நிலவி வருகிறது. காசாவில் உள்ள மருத்துவமனைகள் சூறையாடப்பட்டு வருவதால் மக்கள் அவதிக்குள்ளாகிறார்கள். காசா நகரத்தில் உள்ள அல்–ஷிபா மருத்துவமனையில் மின்சாரம், எரிபொருள், குடிதண்ணீர், அத்தியாவசிய மருந்துகள் என அனைத்துக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால், நோயாளிகள் பெரும் இன்னலுக்கு ஆளாகியுள்ளனர்.

# சீன நிலக்கரி தொழிற்சாலையில் ஏற்பட்ட தீ விபத்தில் சிக்கி 26 பேர் உயிரிழப்பு





வடக்கு சீனாவின் ஷான்சி மாகாணத்தில் உள்ள நான்கு மாடி கட்டடத்தில் ஏற்பட்ட தீ விபத்தில் சிக்கி 26 பேர் உயிரிழந்துள்ளனர்.

நிலக்கரி தொழிற்சாலை ஒன்றுக்கு சொந்தமான கட்டடத்திலேயே இந்த தீ பரவல் ஏற்பட்டுள்ளது.

குறித்த தீ விபத்தில் சிக்குண்டிருந்த 63 பேர் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சிகிச்சைகளுக்காக அனுமதிக்கப்பட்டவர்களில் பலருக்கு சுவாச கோளாறு ஏற்பட்டிருந்ததாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

எனினும் தீப்பரவலுக்கான காரணம் இதுவரையில் வெளியாகவில்லை.

தீ விபத்துக்கான காரணம் தொடர்பாக பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். ஷாங்க்சி மாகாணம் என்பது சீனாவின் மிக அதிக அளவில் நிலக்கரி உற்பத்தி செய்யும் மாகாணம் என்பது குறிப்பிடத்தக்கது.

# தேர்தல் திருத்தங்கள் தொடர்பான யோசனைகளை முன்வைக்கலாம்!

## நேற்று முதல் ஒரு மாதம் கால அவகாசம்

(அஸ்ஹர் ஆதம்)

தேர்தல் திருத்த முறைமை தொடர்பான யோசனைகளை பொது மக்களிடமிருந்து பெற்றுக்கொள்ளும் நடவடிக்கைகள் நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

தேர்தல் திருத்த முறைமை தொடர்பான யோசனைகள் மற்றும் பரிந்துரைகளை முன்வைப்பதற்கான திகதிகள் ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தன.



இதன்படி நேற்று வியாழக்கிழமை முதல் அடுத்த மாதம் 15 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் பொது மக்கள் தமது பரிந்துரைகளை இலக்கம்,21 செமா கட்டடம், ஜனாதிபதி மாவத்தை, கொழும்பு – 01 என்ற முகவரியில் அமைந்துள்ள அலுவலகத்தில் எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ

முன்வைக்க முடியுமென தேர்தல்கள் சட்டங்களைத் திருத்துவதற்கான பரிந்துரைகளை சமர்ப்பிப்பதற்குரிய ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் செயலாளர் தெரிவித்துள்ளார்.



# உலர் உணவுப்பொதி வெருகலில் வழங்கல்

(எஸ்.கீதபொன்கலன்)

உலக உணவுத் திட்டத்தின் அனுசரணையுடன் திருகோணமலை, வெருகல் பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட – தெரிவு செய்யப்பட்ட – பயனாளிகளுக்கு உலர் உணவுப்பொதி வழங்கி வைக்கும் நிகழ்வானது நேற்று வெருகல் பிரதேச செயலாளர் எம்.ஏ.அனஸ் தலைமையில் நடைபெற்றது.

வெருகல் பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட தெரிவுசெய்யப்பட்ட ஈச்சிலம்பற்று கிராம சேவகர் பிரிவில் 164 பயனாளிகளுக்கும் பூமரத்தடிச்சேனை கிராமசேவகர் பிரிவில் 285 பயனாளிகளுக்கும் மற்றும் பூநகர் கிராம சேவகர் பிரிவில் 502 பயனாளிகளுக்கும் தலா இருபது கிலோ துவரம் பருப்பு மற்றும் 5 லீற்றர் சமையல் எண்ணெய் என்பன வழங்கி வைக்கப்பட்டது.







# குடும்ப ஆட்சி முறையை ஒழிக்க சுதந்திர மக்கள் சபை பற்றுறுதி

## ராஜபக்ஷ - ரணில் கூட்டுக்கு ஆதரவு வழங்கோம்

## அம்பாறை பிரமுகர்கள் மத்தியில் டலஸ் விளக்கம்

(த. தர்மேந்திரா)

குடும்ப ஆட்சி முறைமையை முடிவுக்கு கொண்டு வருவதில் சுதந்திர மக்கள் சபை உறுதியாக உள்ளது என்று அக்கட்சியின் தலைவரும், முன்னாள் அமைச்சருமான டலஸ் அழகப்பெரும எம். பி தெரிவித்தார்.

தொழிலதிபர் முஹமட் முஸ்தபா முஹமட் நிசாமை தலைவராக கொண்ட அனைத்து கட்சி செயற்பாட்டாளர்கள் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் அம்பாறை மாவட்டத்தின் வேறுபட்ட பல கட்சிகளை சேர்ந்த முழுநேர அரசியல் செயற்பாட்டாளர்கள் நாடாளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை டலஸ் அழகப்பெருமவைச் சந்தித்துப் பேசினர்.

அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வைத்தியர் திலக் ராஜபக்ஷவும் கலந்து கொண்ட இம்முக்கிய சந்திப்பில் டலஸ் அழகப்பெரும மேலும் தெரிவித்தவை வருமாறு:-

ஊழல் அற்ற ஆட்சியே நாட்டுக்கும், மக்களுக்கும் தேவை. அதே போல கல்விமான்களாக, துறை சார்ந்த நிபுணர்களாக இருக்க கூடிய நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு ஊழல் அற்ற ஆட்சியில் முக்கிய பொறுப்புகள் வழங்கப்பட வேண்டும்.

இன பேதம் அற்ற ஆட்சியில் எல்லோரும் இலங்கையர்களே என்கிற மாட்சி ஏற்படுத்தப்பட வேண்டும். குடும்ப ஆட்சி முறைமைக்கு முடிவு கட்டப்பட வேண்டும். நாட்டுக்கும், மக்களுக்கும் நல்ல மாற்றங்களை ஏற்படுத்தித்தர வேண்டும் என்பதில் சுதந்திர மக்கள் சபை பற்றுறுதியாக உள்ளது.

எந்தத் தேர்தல் வந்தாலும் எதிர்கொள்வதற்கு சுதந்திர மக்கள் சபை எந்நேரமும் தயாராகவே உள்ளது. ஆனால் யாருடன் தேர்தல் கூட்டணி அமைப்பது என்கிற முடிவுக்கு இன்னமும் நாம் வரவில்லை. ஆனால் ராஜபக்ஷக்களுடன் ரணில் கூட்டணி சேர்ந்தால் அவருக்கு ஆதரவு வழங்கவே மாட்டோம். - என்றார்.



# காசல்ரீ நீர்த்தேக்க பகுதியில் காயமுற்ற கடல் கழுகு மீட்பு!

(மஸ்கெலியா நிருபர் செ.தி.பெருமாள்)

நோர்வூட் காசல்ரீ நீர்த்தேக்க பகுதியில் புதிய இனக் கழுகு ஒன்று காயமடைந்த நிலையில் மீட்கப் பட்டுள்ளது.

மீட்கப்பட்ட கடல் கழுகு நுவரெலியா வனவிலங்கு அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

நோர்வூட் காசல்ரீ நீர்த்தேக்க பகுதியில் உள்ள சுற்றுலா விடுதியில் உள்ள ஊழியர் ஒருவரே அந்தக் கடல் கழுகைப் பிடித்து, ஒப்படைத்து உள்ளார்.

நோர்வூட் காசல்ரீ நீர் தேக்கத்தை சுற்றி வாழும் கடல் கழுகுகள் மீது காகங்கள் தாக்கியதால், கடல் கழுகு காலில் ஏற்பட்ட காயம் காரணமாக பறக்க முடியாமல், காசல்ரீ நீர்த்தேக்கத்தில் பகுதியில் இருந்துள்ளது.

அது மீட்கப்பட்டு ஹட்டன் பொலிஸாரின் ஊடாக நுவரெலியா வனவிலங்கு அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

நுவரெலியா வனஜீவராசிகள் அலுவலக அதிகாரிகள் ஹட்டன் பொலிஸ் நிலையத்திக்கு வந்து காயமடைந்த கடல் கழுகை ஹட்டன் பொலிஸாரிட ம் இருந்து பொறுப்பேற்று, ரந்தெனிகல கால்நடை வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றனர்.

# தேரரின் தாக்குதலுக்கு உள்ளாகி பொலிஸ் உத்தியோகத்தர் காயம்

தேரர் ஒருவர் கூரிய ஆயுதத்தால் தாக்கியதில் தெனியாய பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் காயமடைந்துள்ளார்.

இந்தப் பொலிஸ் உத்தியோகத்தர் மேலதிக சிகிச்சைகளுக்காக காலி – கராப்பிட்டிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார் எனப் பொலிஸ் ஊடகப்பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சட்டத்தரணி நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

முறைப்பாடு தொடர்பில் விசாரணை செய்வதற்கு சென்றிருந்த போதே, தனிப்பட்ட காரணத்தினால், தேரர் பொலிஸ் உத்தியோகத்தர் மீது தாக்குதல் மேற்கொண்டுள்ளார்.

இதனையடுத்து 18 வயதான தேரர் கைது செய்யப்பட்டுள்ளார். அவர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளார்.

37 வயதான பொலிஸ் உத்தியோகத்தரே தாக்குதலில் காயமடைந்துள்ளார்.

காயமடைந்த பொலிஸ் உத்தியோகத்தர், சந்தேக நபரான பிக்குவின் சகோதரியுடன் காதல் தொடர்பில் இருந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.



# சட்டவிரோதமாக மாடுகளை கொண்டுசென்ற மூவர் கைது

## ஒட்டிசுட்டானில் சம்பவம்

முல்லைத்தீவு ஒட்டிசுட்டானில் சட்ட விரோதமான முறையில் அனுமதி பத்திரமன்றி கொண்டு செல்லப்பட்ட 8 மாடுகளுடன் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு 9.30 மணியளவில் யாழ்ப்பாணம் பகுதியில் இருந்து ஒட்டிசுட்டான் நோக்கி லொறி ஒன்றில் மாடுகள் கொண்டு செல்லப்பட்ட நிலையில் முத்தையன்கட்டு பகுதியில் இரவு ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த ஒட்டிசுட்டான் பொலிஸார் சோதனைகளை முன்னெடுத்தனர்.

இதன்போது அந்த வாகனத்தில் சட்டவிரோதமான முறையில், அனுமதி இல்லாமல், மாடுகள் கொண்டு செல்லப்பட்டமை தெரியவந்தது.

சம்பவத்தில் கிளிநொச்சிப் பகுதியை சேர்ந்த இருவரும் புதுக்குடியிருப்பைச் சேர்ந்த ஒருவருமாக மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களிடமிருந்து இரண்டு மாடுகளும், கன்று ஒன்றுமாக மூன்று மாடுகள் இறந்த நிலையிலும், இரண்டு மாடுகள் கடுமையான காயங்களுக்கு உள்ளாகிய நிலையிலும், ஏனைய இரண்டு மாடும் ஒரு கன்றுமாக மொத்தமாக 8 மாடுகளும் அவற்றை கடத்தி செல்வதற்காக பயன்படுத்தப்பட்ட லொறியும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்டவர்கள் மேலதிக விசாரணைகளின் பின்னர் நேற்றைய தினம் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். மூவரையும் இம்மாதம் 28 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கவும். லொறியைத் தடுத்து வைக்கவும், இறந்த மாடுகளைப் புதைப்பதற்கும், ஏனைய மாடுகள் மற்றும் கன்றை ஒட்டுசுட்டான் விவசாயத் திணைக்களத்திடம் கையளிக்கவும் நீதிவானால் உத்தரவு வழங்கப்பட்டது.





# கிரிக்கெட் நிர்வாக சபைக்கு எதிரான மனு பரிசீலனைக்கு!

## மூன்றாவது நீதியரசரும் விலகினார்




கிரிக்கெட் இடைக்கால நிர்வாக சபையை நியமிப்பது தொடர்பிலான வர்த்தமானி அறிவித்தல் குறித்து எதிர்வரும் திங்கட்கிழமை வரை நடவடிக்கை எடுக்கப்போவதில்லை என விளையாட்டுத்துறை அமைச்சர் சார்பில் நீதிமன்றுக்கு உறுதி தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

இதற்கு ஏற்ப, இடைக்கால சபையின் நடவடிக்கைகளை தடுக்கும் வகையில், வெளியிடப்பட்டிருந்த இடைக்கால தடையுத்தரவை நீடிக்காமலிருக்க மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்றுத் தீர்மானித்தது.

கிரிக்கெட் இடைக்கால நிர்வாக சபைக்கு எதிராக இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் தலைவர் ஷம்மி சில்வா தாக்கல் செய்த மனு நேற்று மீண்டும் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இந்த மனு மீதான விசாரணையிலிருந்து மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி நீல் இத்தவெல தனிப்பட்ட காரணத்தினால் விலகினார்.

கிரிக்கெட் இடைக்கால நிர்வாக சபை மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்கவிற்கு எதிராகக் கடந்த 07 ஆம் திகதி வழங்கப்பட்ட இடைக்காலத் தடையுத்தரவை நீடிப்பதற்கு இலங்கை கிரிக்கெட் நிறுவன தலைவர் ஷம்மி சில்வா தாக்கல் செய்த மனு மேன்முறையீட்டு நீதியரசர்களான டி.என்.சமரகோன் மற்றும் நீல் இத்தவெல ஆகியோர் முன்னிலையில் நேற்று மீண்டும் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது, தனிப்பட்ட காரணத்தினால் இந்த மனு மீதான விசாரணைகளிலிருந்து தாம் விலகுகின்றார் என நீதியரசர் நீல் இத்தவெல அறிவித்தார்.

இந்த நிலையில், மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் டி.என்.சமரகோனுடன் நீதியரசர் சோபித்த ராஜகருணா இதற்காக நியமிக்கப்பட்டார்.

இந்த மனு மீதான விசாரணைகளிலிருந்து இதுவரை 03 நீதியரசர்கள் விலகியுள்ளனர்.

எதிர்வரும் திங்கட்கிழமை மனு மீண்டும் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.



# மட்டு. பட்டிப்பளை வீதி வெள்ளத்தில் வலைவீசி மீன் பிடிக்கும் போராட்டம்!

மட்டக்களப்பு மாவட்டம் மண்முனை தென்மேற்கு பிரதேச செயலக பிரிவில் உள்ள கொக்கட்டிச்சோலையில் இருந்து அம்பிளாந்துறைக்கு செல்லும் பிரதான வீதி கடந்த பல வருடங்களாக பள்ளமும் திடலுமாக காட்சியளிக்கிறது.

படுவான்கரைப் பகுதி மக்கள் பிரயாணத்துக்காக மண்முனை பாலம் ஊடாக பயணிக்கும் வீதி இதுதான்.

அந்தப் பாதையைப் புனரமைப்பு செய்வதாக கடந்த 2020 ஆம் ஆண்டு தொடக்கம் மூன்று வருடங்களாக மட்டக்களப்பில் உள்ள இரண்டு இராஜாங்க அமைச்சர்களான சிவநேசதுரை சந்திரகாந்தன், சதாசிவம் வியாழேந்திரன் இருவரும் போட்டி போட்டு விளம்பரம் செய்தும் இதுவரை அந்தப் பாதை சீரமைக்கப்படாமல் அப்படியே உள்ளது.

தற்போதய பெருமழையால் வீதி வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. இதனை கருத்தில் கொண்டு கவன ஈர்ப்புப் போராட்டமாக – புது முறையாக – அரசடித்தீவு இளைஞர்களால் வீதியில் வெள்ளம் நீரம்பியதை அதகாரிகளுக்கும் அமைச்சர்களுக்கும் காட்டும் விதமாக வீதி பெருக்கில் வலை வீசி மீன்பிடிக்கும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

# 'கோப்' தலைவர் பதவியிலிருந்து ரஞ்சித் பண்டாரவை நீக்குங்கள்!

## கணக்காய்வு சேவைகள் சங்கம் கோரிக்கை



"கோப்" எனப்படும் அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய நாடாளுமன்றக் குழுவின் தலைவர், நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் பண்டாரவை அந்தப் பதவியில் இருந்து நீக்கி, அதற்குப் பொருத்தமான வேறு ஒருவரை நியமிக்குமாறு இலங்கை கணக்காய்வு சேவைகள் சங்கம் சபாநாயகரிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவுக்குக் கடிதம் ஒன்றை அனுப்பி அந்த சங்கத்தினர் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளனர்.

அத்துடன், இந்தக் கடிதத்தில் 4 குற்றச்சாட்டுக்கள் இலங்கைக் கணக்காய்வு சேவைகள் சங்கத்தினால் முன்வைக்கப்பட்டுள்ளன.

இந்தக் கடிதத்தின் பிரதிகள் ஜனாதிபதி, அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்கள், கணக்காய்வாளர் நாயகம் மற்றும் அனைத்து ஊடகங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

நிறுவனம் ஒன்று தொடர்பில் கணக்காய்வாளர் நாயகம் "கோப்" குழுவிற்கு சமர்ப்பித்த விடயங்களில் முக்கியமான மற்றும் அவதானத்துக்குரிய விடயங்கள் தவிர்த்து ஒப்பீட்டளவில் குறைந்த ஆபத்தான விடயங்களை முன்னிலைப்படுத்தி, "கோப்" குழுத்தலைவர் செயற்பட்டுள்ளார் என அந்த கடிதத்தில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

# ரஞ்சித் பண்டார 'கோப்' குழுவின் தலைவராகச் செயற்பட முடியாது

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் தெரிவிப்பு



"கோப் குழுவின் தலைவரான நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் பண்டார, கண்டி கிரிக்கெட் கம்பஸ் திட்டத்தின் ஆலோசகராகப் பணியாற்றியுள்ளார். அத்துடன், கிரிகெட் சபை தொடர்பான விசாரணைகளின் போது இவ்வாறான விடயத்தை வெளிப்படுத்தாமல் இருந்ததன் மூலம் அவருக்குத் தொடர்ந்தும் கோப் குழுவின் தலைவராக இருக்க முடியுமா என்பது பிரச்சினைக்குரிய விடயமாகும்."

– இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று விசேட கூற்றொன்றை முன்வைத்து குறிப்பிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

"கண்டி கிரிக்கெட் கம்பஸ் திட்டத்தின் ஆலோசகராக பணியாற்றியுள்ள கோப் குழுவின் தலைவர் ரஞ்சித் பண்டார, கிரிக்கெட் நிறுவனம் கோப் குழுவுக்கு அழைக்கப்பட்டு அவர்களின் விசாரணை மேற்கொள்ளும் போது இது தொடர்பாக அவர் வெளிப்படுத்தாமல் இருந்துள்ளார்.

அதனால் கிரிக்கெட் நிறுவனத்துடன் நெருங்கிய தொடர்புவைத்துள்ள கோப் குழுவின்

தலைவர், தொடர்ந்தும் கோப் குழுவின் தலைவராக இருக்க முடியுமா என்பது பிரச்சினைக்குரிய விடயமாகும்.

அத்துடன் நாட்டு மக்களின் வாக்குகளால் தெரிவு செய்யப்பட்ட, எதிர்க்கட்சித் தலைவரான எனக்கு அரச நிதிக் குழுவில் கருத்து தெரிவிக்க முடியுமா, முடியாதா என வாக்கெடுப்பு நடத்தி, குழுவுக்கு வரமுடியும், ஆனால் பேச முடியாது என எனது வாயை மூடினார்கள்.

ஆனால் கிரிக்கெட் சம்பந்தமான கோப் குழுவில் ரஞ்சித் பண்டாரவின் மகன் கனிஷ்க பண்டார அமர்ந்துள்ளார். எந்த அடிப்படையில் அவர் கோப்குழுவில் அமர முடியும்? அதற்கு அனுமதி வழங்கியது யார்? எதிர்க்கட்சித் தலைவருக்கு இல்லாத உரிமை கோப்குழுவின் தலைவரின் மகனுக்கு எவ்வாறு கிடைத்தது?

அதனால் இங்கு பாரியளவில் சட்டம் மீறப்பட்டுள்ளது. எதிர்க்கட்சித் தலைவரான எனக்கு இல்லாத உரிமை எவ்வாறு கோப்குழுவின் தலைவரின் மகனுக்குக் கிடைத்தது?

அதனால் கோப்குழுவின் தலைவர் ரஞ்சித் பண்டாரவுக்கு எதிராக முன்வைக்கப்பட்டிருக்கும் தரவுகளுக்கு அமைய அவருக்குத் தொடர்ந்தும் கோப்குழுவின் தலைவராக இருப்பதற்கு தார்மிக உரிமை இல்லை. அத்துடன் இது தொடர்பாக விளையாட்டுத்துறை அமைச்சர், சபாநாயகர் பதிலளிக்க வேண்டும்." – என்றார்.

# இன்றைய ராசி பலன்கள் - 17.11.2023



மேஷம்

இன்று நீங்கள் நம்பிக்கை உணர்வு மிகுந்து காணப்படுவீர்கள். உங்களிடம் ஸ்திரத்தன்மை காணப்படும். உங்களின் மாறுபாடற்ற மனநிலை காரணமாக நீங்கள் திறமையான முடிவுகளை எடுப்பீர்கள்.

உங்கள் பணிகளை எளிதாக மேற்கொள்ளவும் அதனை குறித்தநேரத்தில் முடிக்கவும் பணியிடச் சூழல் உகந்ததாக இருக்கும். உங்கள் மேலதிகாரிகளின் ஆதரவைப் பெற்று மகிழ்வீர்கள்.

உங்கள் துணையுடன் அன்பான உணர்வை பகிர்ந்து கொள்வீர்கள். இதன் மூலம் நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

நிதிநிலைமை திருப்திகரமாக இருக்கும். சேமிக்கும் ஆற்றல் அதிகரிக்கும்.

ஆரோக்கியத்தில் எந்தக் குறைபாடும் காணப்படாது. உங்களின் மகிழ்ச்சியான மனநிலை உங்களை ஆரோக் கியமாக வைத்திருக்கும்.



ரிஷபம்

இன்று கட்டுப்பாடற்ற சூழ்நிலை காணப்படும். மந்தமான தருணங்கள் காணப்படும். எனவே இருப்பதைக் கொண்டு மகிழ வேண்டும். எதிர்காலத் திற்காக செயல்பட முயல வேண்டும்.

பணிகளை குறித்தநேரத்தில் முடிக்க இயலாது. முறை யாக திட்டமிடுவதன் மூலம் சிறப்பாக செயல்பட இயலும்.

திரைப்படம் பார்த்தல் மற்றும் வெளியிடங்களுக்கு செல்லுதல் போன்ற நிகழ்சிகள் மூலம் மகிழ்ச்சியான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள்.

இன்று பண இழப்பு காணப்படும். பயணத்தின்போது பணத்தை கவனமாகக் கையாள வேண்டும்.

பதட்டம் காரணமாக கால் வலி ஏற்பட வாய்ப்புள்ளது. யோகா பயிற்சியின் மூலம் ஆறுதல் பெறலாம்.



மிதுனம்

இன்று முன்னேற்றகரமான பலன்கள் காணப்படும். குறைந்த முயற்சியில் வெற்றி பெறுவீர்கள். சிறந்த செயல் திறம் மூலம் உங்கள் திறமைகளை நிரூபிப்பீர்கள். உங்கள் தன்னம்பிக்கை அதிகரிக்கும்.

பணி சம்பந்தமான புதிய வாய்ப்புகள் உருவாகலாம். அந்த வாய்ப்புகளை பயன்படுத்துவதன் மூலம் பணியில் முன்னேற்றம் காணலாம்.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள். உங்கள் குடும்ப வளர்ச்சி மற்றும் குடும்பத்தில் நடைபெறும் சுப நிகழ்ச்சி குறித்து ஆலோசிப் பீர்கள்.

பணவரவு மகிழ்சிகரமாக இருக்கும். உங்கள் வங்கியி ருப்பு உயரும். அது உங்களுக்கு திருப்தியை அளிக்கும்.

உங்களின் மன உறுதி மற்றும் தைரியம் காரணமாக இன்று உங்களின் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.



கடகம்

இன்று முன்னேற்றகரமான பலன் களைக் காண்பீர்கள்.இன்று புத்துணர்ச்சி யுடனும் உறுதியுடனும் காணப்படுவீர்கள். புதிய முயற்சிகளில் பங்கு கொள்வது உங்களுக்கு லாபகரமாக அளிக்கும்.

உங்கள் திறமை காரணமாக பணி களை குறித்தநேரத்தில் முடிப்பீர்கள். முறையாக திட்டமிடு வதன் மூலம் உங்கள் பணிகளை உற்சாகமாக செய்வீர்கள்.

உங்கள் துணையுடன் நட்பான உறவுமுறை கொள்வீர்கள். இதனால் உங்கள் துணையிடம் நல்ல புரிந்துணர்வு காணப்படும்.

இன்று போதிய பணம் காணப்படும். இன்று கணிச மான தொகை சேமிப்பீர்கள்.

உங்களிடம் காணப்படும் ஆற்றல் காரணமாக இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.



சிம்மம்

இன்று துடிப்பான நாளாக இருக்காது. ஆன்மீக பயணங்கள் உங்களுக்கு நல்ல பலனை அளிக்கும். பயணங்கள் மூலம் பலனுள்ள மாற்றங்கள் ஏற்படும்.

இன்று பணிச்சுமை அதிகமாக காணப்படும். இதனால் பணிகளை குறித்தநேரத்தில் முடிப்பது கடினம்.

குடும்ப பிரச்சினை காரணமாக உங்கள் துணையுடன் தவறான புரிந்துணர்வு காணப்படும். உங்கள் உறவின் சிக்கல்களை தீர்க்க உங்கள் துணையுடன் மனம் திறந்து பேச வேண்டும். இதன் மூலம் உறவில் நல்லிணக்கம் தக்க வைத்துக் கொள்ள முடியும்.

பணப்புழக்கம் குறைந்து காணப்படும். தேவையற்ற செலவுகள் கவலையை உண்டாக்கும்.

உங்கள் துணையின் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. இதற்காக நீங்கள் செலவு செய்ய வேண்டியிருக்கும்.



கன்னி

பொறுமையான அணுகுமுறையை பராமரிப்பதன் மூலம் நீங்கள் சாதக மான பலன்களை காணலாம். சில சௌகரியங்களை விட்டுக் கொடுக்க நேரலாம். வெற்றி காண முறையாக திட்டமிட வேண்டும்.

உங்கள் பணிகளை மேற்கொள்ளும்போது தவறுகள் நேர வாய்ப்புள்ளது. பனியின் போது நீங்கள் விழிப்புடன் கவனமாக இருக்க வேண்டும்.

உங்கள் துணையுடன் உணர்ச்சி வசப்படுவீர்கள். இதனால் இருவருக்கிடையே கருத்து வேறுபாடு ஏற்படும். சமநிலை அணுகுமுறை மேற்கொண்டு நல்ல புரிந் துணர்வை பராமரியுங்கள்.

அதிகரிக்கும் செலவுகள் கவலையை உண்டாக்கும். பணத்தை விவேகத்துடன் கையாள்வதன் மூலம் நிலை மையை சிறப்பாக சமாளிக்கலாம்.



துலாம்

இன்று முக்கிய முடிவுகள் எடுக்க உகந்த நாள். அவற்றின் மூலம் லாப கரமான பலன் கிடைக்கும். நீங்கள் இன்று நம்பிக்கை உணர்வுடன் காணப்படுவீர்கள்.

பணியில் உங்கள் செயல்திறன் அபாரமாக இருக்கும். உங்கள் பணிக்கு மேலதிகாரிக ளின் பாராட்டைப் பெறுவீர்கள். இதனால் திருப்தியும் சாதித்த உணர்வும் உங்களிடம் காணப்படும்.

உங்கள் வீட்டில் நடக்கும் சுப நிகழ்ச்சி ஒன்றைப் பற்றி உங்கள் துணையுடன் மனம் திறந்து பேசுவீர்கள். உங்கள் துணையுடன் கொண்டாடி மகிழ்வீர்கள்.

பணப்புழக்கம் அதிகமாகக் காணப்படும். பணத்தை பயனுள்ள வகையில் செலவு செய்வீர்கள்.

இன்று சிறந்த ஆரோக்கியம் காணப்படும். ஆரோக் கியத்தில் எந்தக் குறைபாடும் இருக்காது.



விருச்சிகம்

இன்று காணப்படும் குழப்பமான சூழ்நிலை உங்களுக்கு வருத்தத்தை அளிக்கும். அத்தகைய சூழ்நிலையை கையாள்வது கடினம். பிரார்த்தனை மூலம் ஆறுதல் பெறலாம்.

இன்று அதிகப் பணிகள் காணப்படும். நீங்கள் பணியில் தவறுகள் செய்ய நேரலாம். உங்கள் பணிகளை திறம்பட செய்ய முறையாக திட்டமிட வேண்டும்.

உங்களின் உணர்ச்சி வசப்பட்ட மனநிலையை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். இது உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும். எதையும் லேசாக எடுத்துக் கொள்வதன் மூலம் நன்மை விளையும்.

நிதி நிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்காது.பண இழப்பு ஏற்பட வாய்ப்புள்ளதால் கவனமாக இருக்க வேண்டும்.

நீங்கள் தலைவலி மற்றும் சளித் தொல்லையால் அவதிப்பட நேரலாம்.

# இன்றைய ராசி பலன்கள் - 17.11.2023




இன்று நீங்கள் பதட்டமான மன நிலையில் இருப்பீர்கள். இசை கேட்ப தன் மூலம் ஆறுதல் கிடைக்கும். விவாதம் செய்வதை தவிர்த்து நட்பான அணுகுமுறை மேற்கொள்ளுங்கள்.

கவனக்குறைவு காரணமாக பண–ியில் தவறுகள் ஏற்பட வாய்ப்புள்ளது. உங்கள் பணிகளை சிறப்பாக செய்ய கவனமாக இருப்பது உதவியாக இருக்கும்.

உறவில் ஸ்திரத்தன்மை தக்க வைக்க உங்கள் துணையுடன் நட்பான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும்.

பண இழப்பு ஏற்பட வாய்ப்புள்ளது. கூடுதல் செலவுகள் உங்களுக்கு வருத்தத்தை அளிக்கும்.

தூக்கமின்மை காரணமாக கால் வலி ஏற்பட வாய்ப்புள்ளது. பிரார்த்தனை மற்றும் தியானத்தில் ஈடுபடுவதன் மூலம் ஆரோக்கியமாக இருக்கலாம்.




உங்கள் வளர்ச்சியில் சில தடைகள் காணப்படும். என்றாலும் உறுதி மற்றும் சளைக்காத குணம் மூலம் வெற்றி காண்பீர்கள்.

எதிர்மறை விளைவுகள் மற்றும் எதிர்மறை எண்ணங்கள் சிறப்பாக பணியாற்ற தடையாக இருக்கும். சில கட்டுப்பாடுகள் சிறந்த பலன் காண தடையாக இருக்கும்.

கவனமற்ற பேச்சு காரணமாக உங்கள் துணை யுடன் தவறான புரிந்துணர்வு காணப்படும்.உறவில் நல்லிணக்கம் காண நட்பான அணுகுமுறை மேற் கொள்ள வேண்டும்.

வரவும் செலவும் கலந்து காணப்படும். உங்கள் சேமிப்பை உயர்த்துவது கடினமாக உணர்வீர்கள்.

பாதுகாப்பின்மை உணர்வு காரணமாக நரம்பு பிரச்சினை ஏற்படலாம்.




இன்று உங்கள் விருப்பங்கள் நிறை வேறுவதற்கு சாதகமான நாள். இதன் மூலம் திருப்தி உண்டாகும். வெற்றி காண எளிய அணுகுமுறை மேற் கொள்ளுங்கள்.

உங்கள் பணியில் நீங்கள் திறமை யாக செயல்படுவீர்கள்.இதனால் திருப்தி கிடைக்கும். உங்கள் மேலதிகாரிகளின் நன்மதிப்பை பெறுவீர்கள்.

உங்கள் நண்பர் இல்ல விழாவில் பங்கு கொள்ள பயணம் மேற்கொள்ளும் போது உங்கள் துணையுடன் அமைதியான தருணங்களை கழிப்பீர்கள்.

நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்கும். கணிசமான தொகை காண அதிர்ஷ்டம் சாதகமாக இருக்கும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். உங்க ளிடம் காணப்படும் நம்பிக்கை காரணமாக நீங்கள் சிறந்த ஆரோக்கியத்துடன் இருப்பீர்கள்.




இன்று பயணம் காணப்படுகின் றது. இது புதியதொடர்புகள் கிடைக்க பயனுள்ள வாய்ப்பை உருவாக்கித் தரும்.

பணியிடத்தில் நன்மையான பலன் கள் கிடைக்கும். உங்கள் கடின உழைப் பிற்கு பாராட்டைப் பெறுவீர்கள்.

பயணத்தின்போது உங்கள் துணையுடன் மகிழ்ச்சி யான தருணங்களை கொண்டாடி மகிழ்வீர்கள். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

பணப்புழக்கம் மகிழ்ச்சிகரமாக இருக்கும். என்றா லும் குடும்பத்திற்காக சிறிது பணம் செலவு செய்ய நேரும்.

ஆரோக்கியமான உணவு உட்கொள்வதன் மூலம் திடமாக இருக்கலாம். அசௌகரியத்தை சமாளிக்க லாம்.









# கனடாவில் இருந்து வந்த ரூ.6 கோடி குஷ் சிக்கியது

கனடாவில் இருந்து இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட கொள்கலனில் இருந்து ஆறு கோடி ரூபா பெறுமதியான குஷ் போதைப்பொருளுடன் சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவினருடன் இணைந்து மேற்கொ-ாள்ளப்பட்ட சோதனையில் அங்கு ஆறு கோடி ரூபா பெறுமதியான 6 கிலோ குஷ் போதைப்பொருள் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.

இந்தப் போதைப்பொருள் கனடாவில் இருந்து கணேமுல்ல பிரதேசத்திலுள்ள முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட்டது என விசாரணைகளின் போது தெரிய வந்துள்ளது.

இந்தப் பொதியின் உரிமையாளர் சார்பாக வந்த முகவர் சுங்க அதிகாரி களால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை, இதற்கு முதல் இத்தாலி யில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட கொள்கலனில் 35 கிலோ ஹஷ்கிஷ் ஷூம் அமெரிக்காவில் இருந்து இறக்கு மதி செய்யப்பட்ட கொள்கலனில் 10.5 கிலோ குஷ் போதைப்பொருளும் கண்டு பிடிக்கப்பட்டன.

இந்நிலையில், கடந்த மூன்று மாதங்களில் 50 கிலோ கிராம் சட்ட விரோத போதைப்பொருள் சுங்க பிரிவி னரால் கைப்பற்றப்பட்டுள்ளன என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள் ளார்.

# 2,519 புதிய தாதியர்களுக்கு இன்று நியமனக் கடிதங்கள்



இலங்கையின் நோயா ளர்பராமரிப்புசேவையினை வலுப்படுத்தும் வகையில் 2 ஆயிரத்து 519 புதிய தாதியர்களுக்கான நிய மனக் க தங்களை இன்று பிரதமர் தினேஷ் குணவர்த்தன வழங்கி வைக்கவுள்ளார்.

2018 இல் ஆள்சேர்ப்பு செய்யப்பட்ட தாதியர் மாணவர் குழுவின் கீழ் 2020 ஜனவரியில் பயிற்சியை ஆரம்பித்து, பாடநெறியை வெற்றிகரமாக முடித்த 2519 தாதியர்களுக்கு இந்த நியமனக் கடிதங்கள் வழங்கி வைக்கப்படவுள்ளன.

தற்போது நாடளாவிய ரீதியில் 42 ஆயிரத்துக்கும் அதிகமான தாதியர்கள் பணிபுரிகின்றனர்.

இந்த ஆள்சேர்ப்பின் மூலம் நாட்டில் தாதியர்களின் எண்ணிக்கை 45 ஆயிரத்தை தாண்டும் என்றும் கணக்கிடப் பட்டுள்ளது.

# போலிச் சான்றிதழ்களைப் பயன்படுத்தி புற்றுநோய்த் தடுப்பூசி வழங்க முயற்சி!

போலியான சான்றிதழ்களைக் காண்பித்து மற்று மொரு புற்றுநோய்த் தடுப்பூசியை விநியோகிப்பதற் கான தயார்படுத்தல் இடம்பெறுவதாக சுகாதார தொழிற் சங்கவியலாளர்களின் வல்லுநர்கள் சங்கம் தெரிவித் துள்ளது.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந் திப்பில் வைத்து அதன் தலைவர் ரவி குமுதேஷ் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்தார்.

தரமற்ற இம்யூனோ குளோப்ளின் தடுப்பூசிக் குப்பி கள் கொள்வனவு செய்யப்பட்ட சம்பவத்தின் பிரதான சந்தேகநபர் அமைச்சரவையில் உள்ளார் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் சகல தரப்பினரும் அறிந் திருந்த போதிலும் நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளப் படவில்லை எனவும் சுகாதார தொழிற்சங்கவியலாளர் களின் வல்லுநர்கள் சங்கத்தின் தலைவர் ரவி குமுதேஷ் தெரிவித்துள்ளார்.

# போலி விசா மூலம் கனடா செல்ல முயன்றவர் கைது!




போலியான கனேடிய விசாவைப் பயன்படுத்தி சட்ட விரோதமாக நாட்டை விட்டுத் தப்பிச்செல்ல முயன்ற ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குடிவரவு, குடியகல்வு எல்லைப் பாதுகாப்புப் பிரிவினரால் சந்தேகநபர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பை சேர்ந்த 37 வயதான இரட்டை பிரஜா வுரிமை கொண்ட ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் நேற்று காலை 8.15 மணிக்கு துபாய் நோக்கி பயணிக்கவிருந்த எமிரேட்ஸ் விமான சேவையின் ஈ.கே 653 விமானத்தினூடாக கனடா செல்ல முயன்றுள்ளார்.

இதன்போது, அவர் ஆவணங்களை முன்வைத்துள்ள துடன் முன்னெடுக்கப்பட்ட சோதனை நடவடிக்கையில் அவரது கனேடிய விசா போலியாக தயாரிக்கப்பட்டுள்ளமை தெரிய வந்துள்ளது.

இதனையடுத்து, அவரிடம் விசாரணைகள் முன்னெடுக் கப்பட்டதுடன், 30 லட்சம் ரூபா தரகுப்பணம் செலுத்தி போலி விசா தயாரிக்கப்பட்டுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டதாக அதி காரிகள் தெரிவித்துள்ளனர்.

அத்துடன், அவர் கனடா சென்ற பின்னர் மிகுதி 30 லட்சம் ரூபா பணத்தை செலுத்த தரகர்களிடம் இணங்கியுள்ளார் என்றும் அதிகாரிகள் கூறியுள்ளனர்.

சந்தேகநபர் மேலதிக விசாரணைகளுக்காக கட்டுநாயக்க சர்வதேச விமான நிலைய குற்றப்புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.









# தொடரும் சோகம்!

## இறுதியாட்டம், சம்பியன் பட்ட கனவுகள் கலைய

## அரையிறுதியுடன் வெளியேறியது தென்னாபிரிக்கா

## 8ஆவது தடவையாக இறுதிக்குள் நுழைந்தது ஆஸி



இந்தியாவில் நடைபெற்று வரும் உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரின் இறுதியாட்டத்துக்கு அவுஸ்திரேலிய அணி தகுதிபெற்றுள்ளது. இதன்படி எதிர்வரும் 19ஆம் திகதி நடைபெற வுள்ள இறுதியாட்டத்தில் இந்தியாவுடன் மோதவுள்ளது.

13ஆவது உலகக் கிண்ணக் கிரிக் கெட் தொடர் இந்தியாவில் நடை பெற்று வருகிறது.

இதில், நேற்றுமுன்தினம் நடை பெற்ற முதலாவது அரையிறுதியாட் டத்தில் இந்திய அணி வெற்றிபெற்று முதல் அணியாக இறுதியாட்டத்துக் குத் தகுதிபெற்றது.

இந்நிலையில் இறுதிப் போட்டிக்குத் தகுதி பெறும் இரண்டாவது அணி எது என்பதைத் தீர்மானிக்கும் போட்டி நேற்று நடைபெற்றது.

இந்தப் போட்டியில் தென்னாபிரிக்கா மற்றும் அவுஸ்திரேலியா அணிகள் மோதின.

இந்தப் போட்டியில் தென்னாபிரிக்கா அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

அதன்படி அந்த அணியின் தொடக்க வீரர்களாகக் களமிறங்கிய குயின்டன் டி கொக் 3 ஓட்டங்களுடனும் டெம்பா பவுமா ஓட்டம் எதுவும் பெறாமலும் ஆட்டமிழந்து ஏமாற்றமளித்தனர்.

தொடர்ந்து களமிறங்கிய வீரர்களும் சொற்ப ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர்.

ஒரு கட்டத்தில் தென்னாபிரிக்கா 24 ஓட்டங்களுக்குள் 4 விக்கெட்டுகளை இழந்து திணறியது.

பின்னர், 14 ஓவர்கள் முடிவில், 4 விக்கெட்டுகள் இழப்புக்கு 44 ஓட்டங்கள் சேர்த்திருந்தபோது, மழை பெய்ததன் காரணமாக ஆட்டம் தற்காலிகமாக நிறுத்தப்பட்டது. பின்னர் மழை நின்ற தும் ஆட்டம் மீண்டும் தொடங்கியது.

அதிரடியாக விளையாடிய ஹென் றிச் கிளாசன் 47 ஓட்டங்கள் சேர்த்து ஆட்டமிழந்தார். மறுபுறம் டேவிட் மில்லர் சிறப்பாக விளையாடி சதமடித்து 101 ஓட்டங்கள் சேர்த்திருந்த நிலையில் ஆட்டமிழந்தார்.

இறுதியில் 49.4 ஓவர்கள் முடிவில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து தென்னாபிரிக்கா 212 ஓட்டங்களைச் சேர்த்தது.

பின்னர் 213 ஓட்டங்கள் சேர்த்தால் வெற்றி என்ற இலக்குடன் அவுஸ்திரே லிய அணி களமிறங்கியது.

அந்த அணியின் தொடக்க வீரராகக் களமிறங்கிய டிராவிஸ் ஹெட் அதிரடி யாக விளையாடி அரைச்சதம் (62) கடந்து ஆட்டமிழந்தார்.

மற்றொரு தொடக்க வீரர் டேவிட் வோர்னர் 29 ஓட்டங்களுடன் ஆட்ட மிழந்தார். அடுத்து வந்த மிட்செல் மார்ஷ் ‘டக்’ – அவுட்டானார்.

தொடர்ந்து வந்த ஸ்டீவன் ஸ்மித் 30 ஓட்டங்களும், மார்னஸ் லபுசேன் 18 ஓட்டங்களும், கிளென் மக்ஸ்வெல் ஓர் ஓட்டத்துடனும் ஆட்டமிழந்தனர்.

அவர்களைத் தொடர்ந்து ஜோஷ் இங்லிஷ் 28 ஓட்டங்கள் சேர்த்து ஆட்டமிழந்தார்.

இந்நிலையில் 47.2 ஓவர்கள் முடிவில் அவுஸ்திரேலியா 7 விக்கெட்டுகள் இழப்புக்கு 215 ஓட்டங்களைச் சேர்த்தது.

இதன்படி 3 விக்கெட்டுகள் வித்தி யாசத்தில் அவுஸ்திரேலிய அணி தென்னாபிரிக்காவை வீழ்த்தி இறுதிப் போட்டிக்குள் நுழைந்தது.

மிட்செல் ஸ்டார்க் 16 ஓட்டங்களுடனும், பாட் கம்மின்ஸ் 14 ஓட்டங்களுடனும் களத்தில் நின்றனர்.

ஆட்டநாயகனாக அவுஸ்திரேலியா வின் டிராவிஸ் ஹெட் தெரிவானார்.

இந்தத் தொடரில் சிறப்பாக ஆடிவந்த தென்னாபிரிக்க அணி, இறுதியாட்டத் துக்குத் தகுதிபெறும் வாய்ப்பை இழந்து வெளியேறியுள்ளது.

அந்த அணி இதுவரை, 1992, 1999, 2007, 2015 மற்றும் 2023ஆம் ஆண்டுகளில் அரையிறுதிவரை முன்னேறியுள்ளது.

அந்த அணியின் உலகக் கிண்ண இறுதியாட்டம் மற்றும் சம்பியன் கனவு இம்முறையும் தகர்க்கப்பட்டுள்ளது.

19ஆம் திகதி நடைபெறவுள்ள இறு திப்போட்டியில் அவுஸ்திரேலியா, இந்தி யாவுடன் மோதவுள்ளது.